சுருக்கம்

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை – கலையும் பண்பாடும் – நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குவதற்காக நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா,பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.71 நாள்.12.04.2013,

திருவள்ளுவர் ஆண்டு 2044, பங்குனி–30.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.183, சுற்றுலா மற்றும் பண்பாடு (பண்–2) துறை, நாள்.12.10.2011.
2. முதன்மைச் செயலாளர் / கலைப்பண்பாட்டு இயக்கக ஆணையரின் கடிதம் ந.க. எண்.4523/இ2/2012, நாள் 4.12.2012 மற்றும் 7.12.2012.
3. முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு ஆணையர் அவர்களின் நேர்முகக் கடித எண். 4523/இ2/2012, நாள்.17.9.2012.
4. அரசாணை (நிலை) எண்.56, சுற்றுலா,பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.21.3.2013.
5. அரசாணை (நிலை) எண். 61, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள். 28.03.2013.

------

ஆணை:

நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு நலிந்த கலைஞர் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று வரும் கலைஞர் இயற்கை எய்தி விட்டால் அவருடைய மரபுரிமையரான மனைவி / கணவருக்கு இந்நிதியுதவி மாற்றி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவியாக ரூ.1000/– வீதம் அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது.

2. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் 2012–2013 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு 1.3.2013 முதல் மாதந்தோறும் ரூ.1000/– வீதம் அவர்தம் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி அளித்திட ரூ.5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் தொடர்ச்சியாக பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

அ. 2013–2014 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு 01.08.2013 முதல் மாதந்தோறும் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் அவர்தம் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி அளித்திட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

ஆ. நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்க 2013–2014 ஆம் ஆண்டு கூடுதல் செலவினமாக ரூ.80.00 இலட்சம் (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

இ. நலிந்த கலைஞர்களின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்ந்தெடுக்க நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் / வழிமுறைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

4. மேலே பத்தி 3 (ஆ)–வில் ஒப்பளிக்கப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

“2205 – 00. கலையும் பண்பாடும் – 102. கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் –I திட்டத்தில் சேராதது – AA, கலைஞர்களுக்கும், சிறந்த எழுத்தாளர்களுக்கும் ஊக்கமளித்தல் – 09 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”.

(து.தொ.கு.2205 00 102 AA 0914)

5. மேலே பத்தி 3 (ஆ)–வில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினங்களுக்காக கூடுதல் நிதி 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் மேற்கொள்ள முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

6. இவ்வாணையின் பொருட்டு, நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட உள்ள தொகையைப் பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கிட முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 3–ல் நிதியுதவி அனுமதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், நிதியுதவியினை வழங்குவதற்குரிய கொடுப்பாணையினை (Authorization) வழங்குமாறு தமிழ்நாடு மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. 2013–2014 ஆம் ஆண்டுக்கான 500 நலிந்த கலைஞர்களை தேர்வு செய்ய அமைக்கப்படவுள்ள தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அந்தப் பட்டியலை அரசுக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 164/D.S(K.M)/2013, நாள்.28.03.2013ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
கலைப் பண்பாட்டு இயக்ககம், சென்னை –8.
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை – 28.
உறுப்பினர் – செயலாளர், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம்,
சென்னை–28.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (கணக்குகள்), சென்னை– 9/18.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு/தெற்கு/வடக்கு), சென்னை–5/35/79.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
நகல்:–
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் அலுவலகம், கிண்டி, சென்னை–25.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை,
சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–1/பொது)துறை,
சென்னை–9.
நிதி (கல்வி–II/வ.செ.பொ.1/வ.செ.பொ.II)த் துறை, சென்னை–9.
மேலாளர், தேசிய தகவல் மையம், சென்னை–9.
பதிவாளர், தமிழ்நாடு தகவல் உரிமை ஆணையம், தேனாம்பேட்டை,
சென்னை–18.
இகோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்